# தம்பலகாமம் பிரதேச சபை

## திருகோணமலை மாவட்டம்.

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிப்பு

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 யூன் 21 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மே 26 இல் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய தம்பலகாமம் பிரதேச சபையானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் எனது இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் எற்படும் தாக்கங்களைத்தவிர பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொளகைகளுக்கு அமைய தம்பலகாகம் பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிக்கூற்றுக்ள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.**

(அ) சபை ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் நிலையான சொத்துக்களுக்கு பெறுமதானத்தேய்வு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதி ஐந்தொகையில் ரூபா 11,940,612 தொகையான நிலையான சொத்துக்கள் ஏட்டுப் பெறுமதி அடிப்படையில் காண்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் இச் சொத்துக்கள் பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) நூலகப் புத்தகங்களின் இழப்பிற்காக அறவிடப்பட்ட ரூபா 80,643 தொகையானது பேரேட்டுக் கணக்குகளில் பொருத்தமான மெய்மையாய்வுகளை மேற்கொள்வதற்குப் பதிலாக நேரடியாக நூலகப் புத்தகக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிந்தது.

### 1.3.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1 ஆண்டிற்கு மேலாக செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 8,294 ஆகும்.

### 1.3.3 வங்கிக் கணக்குகள்

வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களைப் பகுப்பாய்வு செய்து பின்வரும் கூற்றில் தரப்படுகின்றது.

| விபரங்கள் | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | காலப்பகுப்பாய்வு<br>01 வருடத்திற்கு மேல் 03 வருடங்களுக்குக் குறைவு | மொத்தம் |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 04 | 7,793 | 7,793 |
| | 04 | 7,793 | 7,793 |

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

#### (அ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 கணக்காய்வு ஐயவினாவிற்கு பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காத அதேவேளை அக்கணக்காய்வு ஐயவினாக்களுடன் தொடர்புபட்ட கொடுக்கல் வாங்கல்களின் கணிப்பிடக் கூடிய பெறுமதி ரூபா 38,817 ஆகும்.

#### (ஆ) தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 44,366 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.5 இணங்காமைகள்

அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவு | 1987 இலிருந்து மீளாய்வாண்டின் இறுதிவரை ஆதன வரியை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1989 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள் | |
| ( i) | II ஆம் பகுதியின் 16(1) ஆம் பிரிவு | பிரதேச சபையினால் அசையக் கூடிய மற்றும் அசையாத சொத்துக்கள் என்பவற்றிற்காக பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | I ஆம் அத்தியாயத்தின் 5 (xi) ஆம் பிரிவு | காசு, களஞ்சியம் போன்றன தொடர்பில் காப்புறுதி மேவுகை பெறப் பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (iii) | I ஆம் அத்தியாயத்தின் 5 (xii) ஆம் பிரிவு | காசு மற்றும் களஞ்சியங்கள் போன்ற பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து போதிய பிணைவைப்புப் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | XII ஆம் அத்தியாயத்தின் 214 ஆம் பிரிவு | ஆண்டின் இறுதியில் பின்வரும் இருப்பு விடயங்கள் கணிப்பீட்டுச் சபையால் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.<br>i. முத்திரைகள்<br>ii. கட்டிட விண்ணப்பப் படிவங்கள்<br>iii பழைய புதினப் பத்திரிகையும் சஞ்சிகைகளும் |
| ( v) | XII ஆம் அத்தியாயத்தின் 217ஆம் பிரிவு | காணி மற்றும் கட்டிடங்களின் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டம் | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 153 ஆம் பிரிவு மற்றும் 2006 ஒக்டோபர் 12 ஆந் திகதிய உள்நாட்டு இறைவரி ஆணையாளரின் கடிதம் என்பவற்றிற்கு முரணாக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் நிர்மாண வேலைகள் என்பவற்றிற்கான கொடுப்பனவில் இருந்து ரூபா 38,817 தொகையான பிடித்து வைத்தல் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 10,304,139 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 3,382,274 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடரபான நிலைமை கீழே தரப்படுகின்றன.

| | வருமான விடயம் | 2010 மதிப்பிடப் பட்டது | 2010 உள்ளபடி யானது | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் | 2009 மதிப்பிடப் பட்டது | 2009 உள்ளபடி யானது |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | இறைகளும் வரிகளும் | 6,554,380 | 4,374,853 | 2,179,527 | 6,892,000 | 3,478,541 |
| (ii) | வாடகைகள் | 380,000 | 419,548 | -- | 522,500 | 288,241 |
| (iii) | வேறு வருமானங்கள் | 3,551,000 | 99,943 | 3,436,556 | 2,327,700 | 7,741,458 |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணங்கள்

பல்வேறு கட்டளைகளின் கீழ் திருகோணமலை நீதவான் நீதி மன்றத்தால் 2010 திசெம்பர் 31 வரை சேகரிக்கப்பட்டு பிரதம செயலாளர் / மாகாண வருமான ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ள ரூபா 8,446,254 தொகையான நீதிமன்ற தண்டப்பணங்களைப் பெற சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்வில்லை. சபையினால் பெறவேண்டிய நீதிமன்ற தண்டப் பணங்களை கணிப்பீடு செய்து கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்டவை, உள்ளபடியான செலவினம் மற்றும் முரண்கள் என்பன கீழே தரப்படுகின்றன.

| செலவின விடயம் | 2010 மதிப்பிடப் பட்டது | 2010 உள்ளபடி யானது | 2010 முரண் | 2009 மதிப்பிடப் பட்டது | 2009 உள்ளபடி யானது | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| மீண்டெழும் செலவினம் | | | | | | |
| ஆளணி வேதனங்கள் | 10,316 | 6,643 | 3,673 | 10,160 | 5,861 | 4,299 |
| ஏனையவை | 7,930 | 12,684 | (4,754) | 10,227 | 7,023 | 3,204 |
| உப மொத்தம் | **18,246** | **19,327** | **(1,081)** | **20,387** | **12,884** | **7,503** |
| மூலதனச் செலவினம் | 15,040 | 2,119 | 12,921 | 2,040 | 2,665 | (625) |
| முழு மொத்தம் | **33,286** | **21,446** | **11,840** | **22,427** | **15,549** | **6,878** |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### 2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணி

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணியின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவிகளின் வகை | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது | பற்றாக்குறை/ மேலதிகம் |
|---|---|---|---|
| பதவி நிலைத்தரங்கள் | 01 | - | 01 |
| இரண்டாம் நிலைதரங்கள் | 09 | 09 | -- |
| ஆரம்ப தரங்கள் | 13 | 08 | 05 |
| ஏனைய(அமைய, தற்காலிக) | - | 10 | (10) |
| மொத்தம் | 23 | 27 | (04) |

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 பயன்பாடற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய பௌதீக வளங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட பயன்பாடற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய பௌதீக வளங்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | விடயங்கள் | விடயங்களின் எண்ணிக்கை | பயன்படுத்தப் படாதிருந்த காலப்பகுதி | பெறுமதி |
|---|---|---|---|---|
| | | | | ரூபா |
| (அ) | இருப்புக் காப்பகம் | 01 | 03 வருடங்களுக்கு மேல் | காணப்பட வில்லை |
| (ஆ) | பெக்ஸ் இயந்திரம் | 01 | 02 வருடங்களுக்கு மேல் | |
| (இ) | கணனி மேசை | 01 | 02 வருடங்களுக்கு மேல் | |
| (ஈ) | நிழற்பட பிரதி இயந்திரம் | 01 | 02 வருடங்களுக்கு மேல் | |

### 2.5.2 கிடைக்க வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 203,550 ஆகக் காணப்பட்டதுடன் 01 ஆண்டிற்கு மேலாக நிலுவையாக இருக்கின்ற மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,440 ஆகும்.

### 2.5.3 பெறவேண்டிய உத்தியோகத்தர் கடன்கள்

(அ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய உத்தியோகத்தர் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,825,315 ஆக இருந்ததுடன் 01 ஆண்டிற்கு மேலாக நிலுவையாக இருக்கின்ற மீதிகள் ரூபா 457,236 ஆகும்.

(ஆ) இடம்மாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் பதவியை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 122,422 தொகையான பதவியினர் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.5.4 மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாத சொத்துக்கள்

பௌதீக மெய்மையாய்வு / மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளின் மூலம் உறுதி செய்யப்படாத 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஏட்டுப் பெறுமதியில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 11,940,612 ஆகும்.

### 2.6 வாகனப் பாவனை

வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணையில் உள்ளடக்கப்பட வேண்டிய அவசியமான தகவல்களான பிரயாணத்தின் நோக்கம், ஓடிய தூரம், ஒரு லீற்றரில் ஓடிய தூரம் போன்ற விடயங்கள் குறிப்பிடப்பட்டிராததுடன் மாதாந்த செயலாற்றல் பொழிப்பும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.7 இனங்காணப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள்

தெரிவுக் கணக்காய்வு மற்றும் சபையால் பேணப்பட்ட தகவல்களின்படி, ரூபா 309,295 பெறுமதியான இழப்புக்களும் சேதங்களும் வெளிப்பட்டது.

### 2.8 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) களஞ்சியம்

(உ) வருமான நிருவாகம்

(ஊ) நட்டப் பதிவேடு